சிவமயம்

EGISTERED AS A
NEWS PAPER IN
CEYLON
RP. M. G. No. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புஸ்தகம் ௫௬ ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸு மாசி மீ ௧௯ உ (1948 மார்ச்சு 2 செவ்வாய்க்கிழமை) [ இலக்கம் ௧௦

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே, நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே, அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே, வளர்சிமைய
விமயப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே, எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ
கெழுத வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே, மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே, வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே,

திருச்சிற்றம்பலம்

# கோட்ஸேயின் தாய்

## மகனின்காலில் வீழ்ந்து அழுதாள்

மகாத்மா காந்தியைக் கொலை செய்த பாதகன் நதுராம் கோட்ஸே எப்படித் தன்தாயின் வேண்டுகோளையும் கேட்காமல் தன் கிருத்திரமங்களில் இறங்கினான் என்பது இப்போது வெளியாயிருக்கிறது.

இப்போது சிலகாலமாக கோட்ஸே ஏதோ தீயநோக்கங்கொண்டு திரிகிறான் என்பதை அவன் பெற்றோர் ஒருவாறு யூகித்தறிந்தனர். ஆனால் அவனுடைய கிருத்திரமம் எப்படி முடியப்போகிறது என்பதை அவர்கள் அறிந்தார்களில்லை. கோட்ஸே இரண்டுமன்றமாத காலமாகத் தன் வீட்டுக்கும் ஒழுங்காக வந்ததில்லை. இரவு 12 1 மணிக்கு மேலேயே அநேகமாக வருவான்.

இவன் ஏதோ அக்கிரமச் செயலில் ஈடுபட்டிருக்கிறான் என்பதை யூகித்தறிந்த அவனுடைய பெற்றோர் கூடாநெறியிற் பிரவேசிக்கவேண்டாம் என்று அவனை மன்றாடினர். ஆனால் அவன் திருந்தி நடக்கவில்லை. அவனுடையதாய், ஓர் பிரபல ஹிந்து மகாசபைக்காரரை அணுகி, "ஐயா, என் பிள்ளை ஏதோ கெட்டநோக்கத்துடன் திரிகிறான்; அவன் ஏதோ ஓர் பொல்லாத பயங்கரமான செயலை ஆற்றி எல்லாருக்கும் கெடுதி விளைக்கப்போகிறான் என்று என் மனத்தில் படுகிறது ஆகவே, அவனை அவன் கொண்ட கோலத்திலிருந்து திருத்துங்கள்" என்று அந்த ஆளைக் கேட்டாள். அந்த மனுஷனும் தம்மால் ஆனவரை முயற்சி செய்தும் கோட்ஸே தான் அந்தரங்கமாகத் திரிந்துவருவதை நிறுத்தினான் இல்லை. கடைசியில் அன்னை தன் அவன்காலில் வீழ்ந்து கண்ணீர் சொரிய, "என் மகனே, இனியாவது நீ திருந்தி நட. உன் நடவடிக்கையை நோக்கும்போது, நீ ஏதோ பொல்லாத ஓர் கருமத்தில் ஈடுபட்டிருக்கிறாய் என்று என்மனம் சொல்லுகிறது" என்று கதறினாள்.

பாதகன் கோட்ஸே, தன்னைப் பெற்ற தாயின் சொல்லையும் மீறினான் உலக சிரேட்டரைக் கொன்றான்.

இன்று அப்பாவியைத் தன் வயிற்றிற் சுமந்த குற்றத்தினால், அவன் தாயும், தகப்பனும் உலகில் மிகவும் அபாக்கிய முடையாராய் இருக்கின்றனர்.

# புதிய இந்திய அரசியல்

## திட்டம் வெளியானது

புது இந்திய அரசியல் அமைப்புத் திட்டம் வெளியாகியுள்ளது. இத்திட்டப்படி, இந்தியாவில் பூரண ஜனநாயக குடியரசு நிறுவப்படும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யநாடுகளில் ஒன்றாகவே இந்தியா இருக்குமா அல்லது அவற்றிலிருந்து பிரியுமா என்பதுபற்றிய தீர்மானம் பின்னர் வெளியிடப்படும் என்று இத்திட்ட பிடிகையின் முடிவில் கண்டிருக்கிறது.

நகல் திட்ட புத்தகம் 214 பக்கங்கள் கொண்டது. 215 விதிகள் 18 அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன ஆங்கிலத்திலுள்ள இந்த நகலை, எழுவர் கொண்ட ஓர் சபை தயாரித்தது. நான்கு நியாயவாதிகள், முஸ்லிம்லீக் பிரதிநிதி ஒருவர், இந்திய சமஸ்தானங்களின் பிரதிநிதி ஒருவர், கைத்தொழில் துறையிலிருந்து ஒருவர் அச்சபையில அங்கம் பெற்றிருந்தார்கள்.

மத்திய அரசாங்க சட்டமந்திரி, டக்டர் பி. ஆர். அம்பேத்கார் தலைமையில் மேற்கூறிய சபை சென்ற இரண்டுமாத காலமாக புது அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது; சாம்ராஜ்ய நாடுகளின் அரசியல் திட்டம், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நடைமுறை, அமெரிக்க அரசியல் திட்டம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டது புதிய திட்டம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பன்னிரு திருமுறைச் சிறப்பு

## (பெரியபுராணம்)

தோத்திரநூல்கள் யாவையும் தொகுத்துவைத்த பெருமை நமக்கு மாத்திரம் இல்லை. வைணவசமயத்து ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளியவை திவ்யப் பிரபந்தம் என்று தொகுத்து வைத்துள்ளார்கள். ஆயினும் அத்திருப்பாசுரங்களை அருளிச்செய்தவர்கள்சரிதம் அப்பிரபந்தத்தோடேயே தொடர்பாகக் கூறியிருக்கக்காணோம் பின்னுளோர் தனித் தனியாகத் தம் மனம் போனபடி எழுதியுள்ளமையே காண்டும் அன்றியும் மிகப் பழைய காலத்தவர் எனின் பெருமைமிகும் என்ற எண்ணம் தூண்டக் காலவரையறையைக் கடந்து கதைகளைக் கூறுகின்றனர். ஆதலின் பக்திக்கண் கொண்டு கண்டாலன்றி இக்காலத்தவர் நம்புதல் செய்யார் என்பது திண்ணம். நம் திருமுறையிற் காணும் ஓர் சீரிய முறையைக் காட்டுவதற்கே இவை கூறலானேன். சிவபெருமான் "உலகெலாம்" என்றடியெடுத்துக் கொடுக்க, அதனையே முதலாகக் கொண்டு தொகை, வகை, விரி என்னும் நூற்பாகுபாடுகளுள் விரிநூலை அருண்மொழித்தேவர் அருளினார். அத்தெய்வப் பெருநூல் இத் திருமுறை என்னும் பெட்டியில் பன்னிரண்டாவது அறையாகப் பொருந்தியுள்ளது.

தோத்திரப் பாடல்களை அருளியவர் சரிதம் முதலியவற்றை அறிய அவாவெழுதல் இயல்பு. அந்த அவா நீங்கியிருக்குமாறு செய்தவர் நம் சேக்கிழார் பெருமான். அவ்வடியார் சரிதத்தைத் தம் சிவகரணத்தால் ஆய்ந்து, திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி இவற்றிற் கூறியுள்ள முறையைப் பின்பற்றித் தேவாரங்களையும் மற்றுமுள்ள திருப்பாசுரங்களையும் ஆய்ந்து எதுக்களாலும், எடுத்த மொழிகளாலும், அடியார்கள் வரலாற்றைக் கூறியருளினர். இப்புராணத்துள் கூறி இருப்பனவற்றுள் சிலவற்றைச் சிலர் மறுக்கிறார்கள். அவர் அறியார். திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இவ்விரதகப்பாடல் முதலிறத்தடியார் வரலாறுகளைத் தேவாரங்களை உடன் கொண்டு ஓதிடின் இச்சிவ கதைகளின் உண்மையை மறுக்கவும் கூடுமோ?

தேவாரங்களுக்கு முகவுரையாகவும், விரிவுரையாகவும் திகழ்வது பெரியபுராணம் என்னலாம். சாலப் பல பதிகங்கள் புராணத்தில் இடம் பெற்றுள்ளன. இன்னபதிகம், இன்ன தலத்தில், இன்னசமயத்தில் பாடப் பெற்றது என்று கூறிச் செல்லும் முறை வியப்படையச் செய்கிறது. இப் பெரியபுராணத்தை ஓதினால், உமாபதி சிவாசாரியசுவாமிகள் சேக்கிழார் புராணத்துள்,

"[illegible] கடலைக் கைநீத்துக்
கொளவெளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்யணலை
எண்ணி யளவிடலாம்
பெருங்கடல்மேல் வருமலையை
ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்து விடலாகும்
தருங்கடலின் மீனை அள
விடலாகும் வானத்
தாரகையை அளவிடலாம்
சங்கரன்தாள் தமது
சிரங்கொள் திருத்தொண்டர்
புராணத்தை யளவிட நம்
சேக்கிழார்க் கெளிதலது
தேவர்க்கும் அரிதே"

என்று வியந்தோதியவாறு நாமும் ஓதுவோம். இம்மட்டோ? சேக்கிழார் பெருமானையும், அவர் திருவாய் மலர்ந்த திருத்தொண்டர் புராணத்தினையும் யானைமேல் ஏற்றித் திருவீதியில் வலம் வருகையில் தெருவினுள்ளார்:

"மதுர இராமாயணகதை
உரைசெய்த
வான்மீக பகவனும் ஒப்பல்ல
விதிவழி பாரதம் உரைசெய்து
கரைசெய்த
வேத வியாசனும் ஒப்பல்ல
சிதைவற ஆயிரநாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்ல
பொதியமலைக்குறு முனிவனும்
ஒப்பல
புகழ்புனை குன்றை முனிக்கு...."

என்று புகழ்ந்தோதியவாறு நாமும் புகழ்ந்து ஏத்துவோம்.

"பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர்" ஆகிய குன்றை முனிவர் ஒரு பெரிய உரையாசிரியராகவும் திகழ்கின்றனர். திரிசிரபுரம் மகாவித்துவான மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'நகுபாசு முதல் உரைசெய்தலினால் நவில் உரையாசிரியன்" என்றமை காண்க. "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் திருப்பாசுரத்துக்கு விரிவுரை தந்தமையும், "தோடுடைய செவியன்" என்னும் மெய்ம்மைமொழி திருப்பதிகத்துக்குச் சிறப்புரை தந்தமையும், அடைவு திருத்தாண்டகம் முதலிய பதிகப்பெயர்களுக்குக் காரணம் கூறுதலையும், இன்னோரன்ன பிறவற்றையும் நோக்கின் உரைகூற உரைநடை வேண்டாது செய்யுள் நடையிலேயே உரைகூறும் வன்மையுடையவர் நம் சேக்கிழார் நாயனார் என்பது பெறுதும்.

சரித்திர ஆராய்ச்சியாளருக்கு இத் திருமுறைகள் சாலப் பயன்படுகின்றன. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சம காலத்தவர். மகேந்திரவர்மன் அக்காலத்து அரசாண்டவன் 'மன்னவர்க்குத் தண்டுபோய்' என்ற செய்யுளும், சிறுத்தொண்டர் அப்போரில் கலந்துகொண்டமையும். ஆளுடைய அடிகளும் சிறுத்தொண்டரும் சந்தித்தமையும், ஆளுடைய அடிகள் பாண்டியன் நெடுமாற நாயனாரைச் சைவராக்கியமையும் ஆகிய இக்குறிப்புக்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்க்குப் பெரு விருந்தளிக்கும். திருஞானசம்பந்தர் காலத்திருந்த மற்றைய நாயன்மார்கள் எவ்வெவர் என்று அவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்தால் அறியலாம். இக்குறிப்புக்களோடு சாஸனக் குறிப்புக்களையும் ஒப்புநோக்கிச் சரித்திர ஆராய்ச்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹு மாசி மீ ௰௧௯ உ செவ்வாய்க்கிழமை

## புகைரதத்திற் களவு

இலங்கை அரசாங்க புகைரதத் தொடர்களிற் களவுங் கொள்ளையும் வரவர அதிகப்படுகிறதேயன்றிக் குறைந்தபாடில்லை யெனலாம்; புகைரத அதிகாரிகளும் அபாயமான திருட்டுத்தொழிலைத் தடுப்பதற்குத் தங்களாலியன்ற முயற்சிகளைச் செய்கிறார்களென்பது நிசம்; திருடர்கள், பிரயாணிகள் புகைரதத்திற் கொண்டுசெல்லும் பண்டங்களையும் அணிந்து செல்லும் நகைவகைகளையும் திருடவொட்டாது தடுத்தற்குப் பாதுகாப்புப் பொலிஸரைப் புகைரதங்கள் ஓடுந்தோறும் அவைகளில் நிறுத்தியுள்ளார்கள்; புகைரதத் திருடருங் கொள்ளைக்கூட்டமும் பலமுறை தப்பியோடிவிட, சில சமயங்களில் மேற்படி பாதுகாப்பாளரால் அகப்படுத்தப் பட்டமையுமுண்டு; புகைரதங்களில் நேருங் களவுகள் பெரும்பாலும் கொழும்பி லிருந்து வடபகுதிக்குப் போக்குவரவு செய்யும் புகைரதத் தொடர்களிலேயே நேர்கின்றன. காரணம், இலங்கையில் மிகவும் நீடித்த தூரத்திற்கு இராக்காலத்திற் போக்குவரவு செய்யும் புகைரதம் கொழும்பு—காங்கேயன்றுறைப் புகைரதமேயாகும்.

இற்றைக்குச் சிலதினங்கட்கு முந்தி கொழும்பிலிருந்து காங்கேயன்றுறைக்குப் புறப்பட்ட புகைரதத்தொடரில் பிரயாணஞ் செய்த ஒரு பிரயாணியின் சட்டையையும் அதன் கணுள்ள பணம் பொருள்களென் னுமிவைகளையும் திருட னொருவன் பிடுங்கிக்கொண்டு பொத்துஹாரஸ்தானத்திற் குதித்து, அங்கே வந்து சற்றுநேரந் தங்கி நின்ற காங்கேசந்துறை—கொழும்புப் புகைரதத்திற் பாய்ந்து ஏறித் தப்பியோடிவிட்டானும்; ஆனால் அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவாறு உழவறிந்து தொடர்ந்து பொல்காவலைப் புகைரதத் தானத்திற்கு வெளியே நிற்கும்போது, அத்திருடனையும் அவன் திருடிய சட்டையையும் சட்டையுள் இட்டிருந்த பணம் 240ரூபா, ஊற்றுப்பேனை, கெடிகாரம் முதலிய பொருள்களையும் அகப்படுத்திவிட்டார்களாம்; இப்படியே காங்கேயன்றுறையிலிருந்து கொழும்புக்குச் சென்ற இன்னொரு புகைவண்டித் தொடரில், ஒரு பிரயாணி அங்குள்ள இன்னொரு பிரயாணியின் பட்டுவேட்டியைத் திருட, அதனாற் பிணக்குஞ் சண்டையும் மூள, பாதுகாப்பு உத்தியோகத்தர் திருடியவரைப் பிடித்துக் கேட்க, அவர் தாம் செய்தது நிசமென்று ஒப்புக்கொள்ள, பாதுகாப்பு உத்தியோகத்தர் அவரை அநுராதபுரம் பொலிஸ் தானத்தில் ஒப்புவித்துவிட்டனர்; இப்படிப் புகைரதத்திற் களவு நேர்வதும், சிலர் அகப்படுவதும் பலர் அகப்படாது தப்பிப் போதலும் இலங்கைப்புகைரதத்திற் சகசமாய்விட்டன.

புகைரதத்திலே திருடுதலும் புகைரதத்தின் போக்கை வழியிலே தடையிட்டுத் தடுத்து நிற்கச்செய்து கொள்ளை யடிப்பதுமாகிய அக்கிரமச் செயல்கள் இலங்கையிலே சென்ற உலக இரண்டாம் யுத்தப்போது முதன் முதற் றொடங்கிய வெனலாம்; ஆனால், உலக யுத்தம் முடிந்து வருடக் கணக்காகியும், இந்தப் புகைரதத் திருட்டு ஒழிந்தபாடில்லை, சிறிது சிறிதாகக் குறைந்து வந்தபாடுமில்லை யெனலாம்; இந்தத் தீக்கருமத்தை இன்னமும் அதிகப்படவிட்டால் புகைரதப் பிரயாணிகட்கு உயிர்ச்சேதமும் நேருமென்பது தீர்க்கமாகச் சொல்லத்தக்கது. அந்த நாட்களில் இந்திய புகைரதத்திலேதான் களவு அதிகமெனவும், இலங்கைப் புகைரதத்திலே களவு நேர்தல் அரிதினுமரிது எனவுங் கேள்விப்பட்டுள்ளேம். ஆனால் இப்பொழுது ஆராயுமிடத்து இலங்கைப் புகைரதத்தில் நேருங் களவுகளும் அநர்த்தங்களும் இங்குள்ள மக்கள்சௌகரியத்தோடு பிரயாணஞ் செய்தற்கும், வியாபாரிகள் தங்கள் பொருள் பண்டங்களைப் பாதுகாப்போடு அனுப்புதற்கும் தருவித்தற்கும் பிரதான சாதனமாகவுள்ள ரயினர் புகைரதம் இப்படியான அநர்த்தங்களோடு கூடியிருக்குமானால் இது நாட்டிற்குப் பெருங் கேடாய் முடியுமல்லவா? புகைரதப் பிரயாணக் கிரயத்தை அதிகாரிகள் முந்தியிருந்ததைககாட்டிலும் இப்பொழுது வற்றிவிதித்திருத்தல் ஊரவர்களுட் பலருக்குத் திருப்தியீனத்தை விளைத்துவிட்டது; இப்படியிருக்கும்போது புகைரதப் பகுதியில் நேரும் மேலே சொல்லப்பட்ட கெடுதிகளை அதிகாரிகள் விரைவிலே தடுத்தற்காகிய முயற்சி செய்தே தீரவேண்டும்; புகைரதத்திலே களவும் கெடுதிகளும் நேர்தல் சிங்கள நாட்டிலேயேயன்றி இந்தத் தமிழ்நாட்டி லில்லாமை அவதானிக்கத்தக்கதாம்.

## உருவச்சிலைத் திறப்புவிழா

6-3 48 சனிக்கிழமை மாலை 5-30மணிக்கு சென்னை இராசதானிக் கலாசாலையில் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், டக்டர் ஸேர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் அவர்களின் தலைமையில் கனம் பிரதமர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் மகோமகோபாத்தியாயடாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் உருவச்சிலையைத் திறந்து வைப்பார்.

## புகையிரதப்பகுதித் தலைவர்

இலங்கைப் புகைரதப்பகுதித் தலைவரான திரு. ஜே. ஈ எல் பொட்ஜர் என்பவர் சீக்கிரமே, இங்கிலாந்துக்கு லீவில் செல்வார் என்று தெரிகிறது அவர் லீவு முடிந்து வரும்வரைக்கும் திரு எம் கனகசபை புகைரதப்பகுதித் தலைவராகக் கடமையாற்றுவர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

# சாதிக் கர்வம்

## நீதியரசரின் கண்டனம்

இந்த இலங்கையில் சட்டம் என்றும், நீதி என்றும், அவற்றை வழங்க நீதிஸ்தலங்கள் என்றும் இருக்க ஓர் அரசாங்கம் இருப்ப அவற்றைப் பொருட்படுத்தாது அச்சட்டத்தை உங்கள் பொறுப்பாக்கி அதிகாரம் செலுத்த நீங்கள் தீர்மானித்திருக்கிறீர்கள். இப்படியான ஓர் சம்பவம் ஏர் நாகரீகமடைந்த சமூகத்திடையே நடப்பது அச்சமூகம் முழுவதுக்குமே அவமானத்தைக் கொடுக்கும். இவ்வித வழக்குகளில் எதிரிகளாக வருகிறவர்களுக்கு எந்தவிதமான அநுதாபமும் தயை தாட்சண்யமும் காட்டமுடியாது.

மேலேகோட்டியவாறு யாழ்ப்பாணம் சுப்பிறீங் கோட்டில் நீதிபாசர் சேர். ஜோன் ஹௌவர்ட் மிருசுவில்—இட்டாவில கிராமங்களைச் சேர்ந்த ஏழு எதிரிகளுக்குத் தண்டனை விதிக்கையிற் கூறினார்.

இவ்வழக்கில் சென்ற வருடம் பெப்ரவரி மீ 24-ந் தேதி தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த பொன்னுத்துபாவிலு கப்ரீல் பொன்னுத்து ஆகிய இருவரை கொலைசெய்ய முயற்சித்ததாய் மிருசுவில் இட்டாவில் கிராமங்களைச் சேர்ந்த ஏழு பேர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பொன்னுத்து பாவிலு சாட்சியத்தில் தெரிவித்ததாவது: 'சம்பவம் நடந்த அன்று அதிகாலை 3 மணிபோல் "ஐயோ, ஐயோ" என்ற சத்தம்கேட்டு வெளியே வந்தேன். இந்த எதிரிகளுடன் இன்னும் சுமார் 8, 10 பேர் டோர்ச் லைட்டுடனும் பெரிய தடிகளுடனும் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தேன. இரண்டாவது எதிரி சிதம்பரப்பிள்ளை எனது மாமாவைத் தாக்கினர் பின் பாவிலு எங்கேயென்று கேட்டுக்கொண்டு அவர்கள் என்னிடம் வந்தார்கள். முதலாவது எதிரி இராசேந்திரம் என்னைத் தடியால் வலதுகாதில் அடித்தார். நான் கீழே விழுந்ததும் இரண்டாவது எதிரி தலையில் அடித்தார். மற்ற எதிரிகளும் தாக்கத் தொடங்கினார்கள். மூன்றாவது எதிரி செல்லத்துரை வலதுகாலில் ஒரு பெரிய கத்தியால் வெட்டினார். கால அறுந்து தொங்கியது நான் மயக்கமடைந்துவிட்டேன். 4 மாதங்கள் பெரிய ஆஸ்பத்திரியில் இருந்தேன். இரண்டாம் மூன்றும் எதிரிகள் முன்பும் ஒருமுறை என்னைத் தாக்கி அது சம்பந்தமான வழக்கு இச்சம்பவம்நடைபெற ஒன்றரை வருடத்துக்கு முதலே முடிவடைந்தது.

"இன்னொருவரான கப்ரீல் பொன்னுத்து சாட்சியம் கொடுக்கையில் சம்பவம் நடந்த அன்று தாம் தாக்கப்பட்ட மாதிரியைத் தெரிவித்தார்; மார்பிலும் தலையிலும் பெருந் தடிகளால் அடிக்கப்பட்டதாயும, இடது காலில் கத்தியால் வெட்டப்பட்டதாயும் கூறினார் மேலும் "எதிரிகள் யாவரையும் தெரியும். ஐயாத்துரை என்பவருக்கு பறையடிக்க வரும்படி கேட்டதற்கு நான் மறுத்தேன். மற்றவர்களும் கேட்டதற்கு மறுத்தேன்" எனறு ர்ணுந்து தெரிவித்தார்.

ஜூரிமாரின் அபிப்பிராயப்படி நீதியரசர் எதிரிகளைக் குற்றவாளிகளெனக் கண்டு அவர்களுக்குத் தனித்தனி 7 வருடக கடுங்காவற் சிறைத் தண்டனை விதித்தார்

## காந்திஜி ஆஸ்ரமம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில், காந்திஜீயின் ஞாபகார்த்தமாக ஆச்சிரமமொன்றை நிறுவுவதுபற்றி ஆலோசிக்க ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திரு, பராராஜசிங்கம் தலைமைவகித்தார். தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அரசாங்கசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் கே. கனகரத்தினம், பீட்டர் கெனமன் முதலியோரும், திரு. தில்லைநாதனும காந்திஜியின் அகால மரணம் குறித்தும், அவர் பூதவுடல் மறைந்தபோதிலும் அவருடைய ஆத்மீகக் கொள்கைகளை நிலவச்செய்யவேண்டுமென்றும், அவரின் ஞாபகார்த்தமாக ஓர் ஆச்சிரமம் அமைத்தல் வேண்டுமென்றும் கூறினார்கள். ஓர் பகிரங்கக் கூட்டத்தை இரண்டு வாரத்துக்குள் நகரமண்டபத்தில், நடத்தி எல்லோருடைய அபிப்பிராயங்களையும் தெரிந்துகொள்ளுவது அவசியமென்று திரு. கே, கனகரத்தினம் சொன்னார். இவ்வாறே நகரமண்டபத்தில் பின்பு ஒரு பொதுக்கூட்டம் நடத்தி யோசிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

## நூற்குறிப்பு

### நான்காம் ஐந்தாந்தரக் கணிதங்கள்

இவையிரண்டும் வித்தியாபகுதியாரின் புதிய பாடத்திட்டத்திற்கு இயைய, பள்ளிக்கூட மாணவர்பொருட்டுப் பல நூல்களை எழுதி வெளியிடுதில் தக்க அநுபவம் வாய்ந்தவராகிய திரு. வே, சிவக்கொழுந்து ஆசிரியரால் எழுதப்பெற்றன. பிரதிகள் நன்கு நல்ல முறையில் அச்சிடப்பெற்றுள்ளன ஏனைய வகுப்புகளுக்குரிய கணிதங்களையும் மேற்படி ஆசிரியர் எழுதி அச்சிடுகின்றனர்; இவை மாணவர்க்குப பயன்படுமென்பது எமது அபிப்பிராயம் நான்காந்தரக் கணிதம் விலை ரூபா 1—15 ஐந்தாந்தரக் கணிதம் விலை ரூபா 1—75; பிரதிகள் பருத்தித்துறையிலுள்ள வடஇலங்கா புத்தகசாலையிலும், யாழ்ப்பாணம் கொழும்பு முதலாம் ஏனைய பட்டினங்களிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன.

# 4 பேர்!

## கண்டித்தொகுதி அபேட்சகர்

திரு. ஜோர்ஜ் ஈ. டீ சில்வா இழந்த கண்டி ஸ்தானத்துக்கு 4 அபேட்சகர் போட்டியிடுவர் என்று தெரிகிறது. திரு. சேனநாயக்காவின் ஐக்கியதேசியக்கட்சியின சார்பாகக் கண்டி மேயர் திரு. ஏ வி எல். ரத்வத்தை முன்வருவார்.

சென்றமுறை போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு. ரீ. பி. இலங்கரத்தினவும் ஓர் அபேட்சகராக முன்வருவாராம். இவர் கட்சிப்பற்றில்லாதவர் என்ற தன்மையில் போட்டியிடுவர்; எனினும் இடதுசாரிகள் ஆதரவும் அரசாங்க உத்தியோகத்தர் ஆதரவும் அவர்க்கு நிச்சயமாகக் கிடைக்கும்.

கண்டி நகரசபையில் அங்கத்தவராயிருக்கும் திரு. ஜீ எல். சேனநாயக்கா என்பவரும போட்டியிட ஆலோசிக்கிறார்.

திரு. குணசிங்ஹாவின் தொழிற் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். ஈ. ஜெயத்திலகாவும் ஓர் அபேட்சகராக முன்வருவாராம்.

இவர்களைவிட, இந்தியக்காங்கிரசும் ஓர் அபேட்சகரை நிறுத்தலாம் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் சமாதானம்

## குற்றச் சாட்டுகளுக்குப் பதில்

யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு க. பொன்னம்பலம் தம் பரிபாலனத்தைச் சீரிய முறையில் நடத்தவில்லை. ஆதலினால் நகர சபை அவர்மீது அதிருப்தி தெரிவிக்கிறது என்னும தீர்மானத்தை எடுத்தாண்டபோது திரு கே. வீ. சின்னத்துரை திரு சாம் சபாபதி என்பவர்கள எடுத்துரைத்த நியாயங்கள் சென்ற பிரசுரத்தில் வெளிபாயின. அங்கத்தவர்கள் பரித்த குற்றச்சாட்டுகளுக்குத் தலைவர் திரு. க. பொன்னம்பலம் அளித்த சமாதானத்தைக் கீழே தருகிறோம். நகரசபை அங்கத்தவர்கள் கண்டபடி தம் பரிபாலன விஷயத்தில் தலையிட்டு வந்ததை திரு பொன்னம்பலம் தம விடையிற் சுட்டிக்காட்டுகிறார். திரு. பொன்னம்பலம் கூறியதாவது:—

"என்னுடைய இவ்வளவு நாளைய பரிபாலனத்திலே குறைகள் இருந்திருக்குமாயின், நான் பல விஷயங்களில் கண்டிப்பான நடைவடிக்கை எடுக்கவில்லையாயின், அதற்கு அங்கத்தவர்கள் சிலர் எனது பரிபாலன விஷயத்தில் அடிக்கடி தலையிட்டதே காரணமாகும். நகரசங்கக் கந்தோரில் கடமையாற்றும் ஓர் உத்தியோகத்தரிற் பிழைகண்டு அவர்மீது நடைவடிக்கை எடுக்க நான் முயற்சிக்கும் போது, அந்த உத்தியோகத்தருக்காகப் பரிந்துபேசுதற்கு யாரும் ஓர் அங்கத்தவர் பட்டுவிடுவார்.

"பட்சபாதக முறையில் நான் என் பரிபாலனத்தை நடாத்தினேன் என்று குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டுக்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை என்பதையும் அது பொய்யானது என்பதையும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். நல்லூர் வட்டாரத்தி ல மற்றும் வட்டாரங்களிலும் பார்க்க அதிகமான வேலைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அங்கே நடந்த வேலைகளின்பொருட்டுத் தான் அதிகமான பணம் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. நான் எனது வட்டாரத்தைப் புறக்கணித்து மற்ற வட்டாரங்களில் வேலையில் என் கவனத்தைச் செலுத்தியபடியால், சென்ற நத்தார் நாட்களில் எனது வட்டாரத்து மக்கள் கூட்டம்கூடி எனது பாராமுகத்தைக் கண்டித்திருக்கின்றனர் என்பதையும் இங்கே குறிப்பிடாமலிருக்கமுடியாது.

"மின்சார இணைப்புக்களுக்கு நான் எதேச்சாதிகாரமாக உத்தரவு அளித்தேன் என்று என்மீது ஓர் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் ஓர் இணைப்பாவது மின்சாரப்பகுதி அதிகாரியின் சிபாரிசு இல்லாமல் யான் கொடுக்கவில்லை மின்சாரப் பகுதி அதிகாரி சிபாரிசு செய்த ஆட்களில், எவர்க்கு மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டுமென்பதில், அங்கத்தவர்களின் வற்புறுத்தலுக்கு யான் ஆளாகவேண்டியிருந்தது. இன்னா இன்னாருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று அங்கத்தவர்கள் வந்து என்னை வில்லங்கப்படுத்தினர்.

'நகரசபை எல்லைக்கு வெளியே மின்சார இணைப்பைக் கொடுத்தேன் என்று ஓர் குற்றம் சாட்டப்பட்டது. அது சரியானதல்ல. நகரசபைஎல்லையிலுள்ள ஓர் தெருவில் மின்சாரம் கொடுத்தோம். ஆனால் அந்த இணைப்புக்கான முழுச் செலவும் அதனைப் பெறுபவராலேயே பொறுக்கப்பட்டது. இது நடந்தது மூன்று வருஷங்களுக்கு முன்பு. சங்க அங்கத்தவர்களுக்கு இது அப்போதே தெரியும்,

'சங்கக் கந்தோரில் இரண்டு "கிளார்க்மார்" ஒருவரோ டொருவர் அடிபட்டுக் கொண்டார்கள் என்பதை நான் அறியமாட்டேன்; இதனை யறிந்தவுடன் இன்று குற்றம் சாட்டும் அங்கத்தவர்கள் எனக்கு அறிவித்திருந்தனரா?

"சங்கக் கந்தோரில் உள்ளவர்கள் லஞ்சம் பெறுகிறார்கள் என்று ஓர் குற்றம் சாட்டப்பட்டது. அப்படியான ஓர் உத்தியோகத்தர் இங்கேயிருந்தால், அதனைப் பற்றி எனக்கு அறிவித்திருக்க வேண்டியது அங்கத்தவர்களின் கடமையில்லையா? அப்படி எனக்கு அறிவித்திருந்தால் நான் அந்த லஞ்சம்பெறும் உத்தியோகத்தர்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுத்திருப்பேன். இதுவரை சங்க உத்தியோகத்தர் எவர்மீதாவது இத்தகைய குற்றச்சாட்டு இங்குள்ள அங்கத்தவர்களாவது, பொது ஜனங்களாவது பாரிக்கப்படவில்லை.

'ஊரவர்கள் வீடுகட்டும் விஷயத்தில் பிரமாணத்துக்கு விரோதமாக நான் அநுமதியளித்தேன் என்றோர் குற்றம் என்மீது சாட்டப்பட்டிருக்கிறது சுகாதார உத்தியோகத்தர் சிபாரிசு செய்யாத எந்த வீட்டுப் "பிளானையும்" நான் ஓர் போதும் அங்கீகரித்தது இல்லை; சுகாதார உத்தியோகத்தர் ஓர் பொறுப்புள்ள அரசாங்க அதிகாரி: நகர அபிவிருத்தி-வீடு கட்டுஞ் சட்டப் பிரமாணத்துக்கு விரோதமாக எப்போதாவது வீடுகட்ட நான் அநுமதித்தது இல்லை ஆனால், மண் வீடு கட்டவரும் சாதாரண மனிதர் விஷயத்தில் நான் தாட்சண்யம் காட்டியே நடந்துவந்திருக்கிறேன். தெருவில் இருந்து 25 அடிக்கப்பால்தான் வீடுகட்டவேண்டும், அல்லது சுவர் எழுப்பவேண்டும் என்ற பிரமாணத்தை நான் கண்டிப்பாகக் கையாள முடியாமலிருக்கிறது என்? தெருவோரத்தில் அக்கட்டிடங்கள் அல்லது சுவர் இருந்தால்தான் அவற்றைத் தடுக்கலாம் என்று சுப்பிறீம்கோடு தீர்ப்பளித்திருக்கிறது.

"வண்ணார்குளத்தருகே யுள்ள கட்டிடம் எல்லையை மீறியிருக்கிறது என்பதை நானும் அறிந்துதான் இருக்கிறேன். அவ் விஷயத்தில் நான் நடைவடிக்கை எடுத்துக் கட்டிடச் சொந்தக்காரர்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் அந்த விஷயம் இப்போது உயர்தர நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது அதன் தீர்ப்புக்குப்பின், கட்டிடத்தை யழிக்க முயற்சி எடுப்பேன்.

"நகரசங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களின்படி நான் நடக்கவில்லை என்று திரு சாம் சபாபதி குற்றம்சாட்டினார். அப்படி நான் எந்தத் தீர்மானத்தின்படி நடக்கவில்லை என்று காட்டும்படி திரு. சபாபதிக்கு இதோ பகிரங்கமான சவால் விடுக்கிறேன். நாலு வருஷமும் 2 மாதங்களும் கழிந்துவிட்டபின், இப்படியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன் என் பரிபாலனத்தில ஏதும் பிழைகள் நிகழ்ந்திருக்குமாயின், அவை சென்ற 2 அல்லது 3 வருஷகாலத்தில் நிகழ்ந்திருக்கவேண்டும். அப்பிழைகள் நிகழும் காலத்தில், என் அவற்றை அங்கத்தவர்கள் எடுத்துக்காட்டவில்லை?

"இன்று சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை இழைக்கத் தூண்டிய அதே அங்கத்தவர்கள் இப்போது என்மீது நம்பிக்கையிலலாத் தீர்மானம் கொண்டுவருவதற்குக் கையொப்பம் இட்டது நீதியல்ல முறையல்ல"

## காந்தி திருப்புகழ்

க. இ.

சத்ய சாந்த சொரூபா நமோ நம
சகல ஜீவர்க்கும் சகாயா நமோ நம
சமரச நெறிக்கரசே நமோ நம —ஜெயகாந்தி!

முத்துப்போல் நகை முனிவா நமோ நம
மூவர்க்கும் ... தழுள்ள மூர்த்தி நமோ நம
மூவுலகும் போற்றும் முதல்வா நமோ நம
—உளைவசி

நித்தந் தாக்கிய நீசராஜேருக்கும்
நிம்மதி அருள் நிமலா நமோ நம
நீணிலத்திற் கனியே நமோ நம —வெகுகோடி

பத்தர் தங்கள் பகவா நமோ நம
பரம ரீஷ்காமியப் பண்பே நமோ நம
பாரெலாந் தொழும் பதியே நமோநம
—தினந்தோறும்

சித்த சுத்தியோ டேத்தியும் வாழ்த்தியுன்
சேவைதன்னில் சிரத்தையுங் காட்டியே
சேகமத்யவே வாழும் உயர்நெறி
—தருவாயே.

## ஒரே சமயத்தில் நான்கு குழந்தைகள்

### இலங்கையில் எக்காலத்தும் நிகழாததாம்

சென்ற செவ்வாய்க்கிழமை சிலாபத்தி லுள்ள அரசினர் வைத்தியசாலையில் ஒரு இளம்பெண் நான்கு குழந்தைகளை ஏககாலத்திற் பிரசவித்தாள்; முன் எப்போதாயினும் இந்நாட்டில் இப்படி நான்கு குழந்தைகளை ஏககாலத்திற் பெற்றசெய்தியில்லையாம். பெற்றவளின் வயசு 28. இவள் சிங்களம்பேசும் தமிழ்ப்பெண். இவளுடைய கணவனின்பெயர் பிலிப்பு;விவாகம் நடந்து 2 வருடம்; இவர்களுக்கு முந்தியே நான்கு ஆண்குழந்தைகளும் உண்டு அப்பிள்ளைகளின்வயது முறையே 8, 6, 4 2 ஆகும்; இப்பொழுது பிறந்துள்ள நான்கு பிள்ளைகளுள் மூன்று ஆண் குழந்தைகள்; நான்கு குழந்தைகளிலும் இளைய ஆண்குழந்தை மாத்திரம் சற்று நொய்யதாகக் காணப்படுகிறதாம். இந்த நான்கு குழந்தைகளின் க்ஷேமத்தை மேற்படி வைத்தியசாலை டக்ரர் V. T. பசுபதியவர்களும், மிஸ் ஹான்கொக் என்னும் மருத்துவ மாதும் நன்கு பேணுகின்றார்களாம்.

## பர்மிய அரசரின் பழைய சிம்மாசனம்

### திருப்பிக் கொடுபடலாயிற்று

பிரித்தானியர் பர்மாநாட்டினைக் கைப்பற்றியபோது அந்நாட்டு அரசனைச் சிறைப்படுத்தி இந்தியாவிற் கொண்டுவந்து சிறை வைத்தனர். அவ்வரசன் இந்தியாவிற் சிறையிருந்து இற்றைக்கு 60 வருஷங்களுக்குமுன்னர் மாண்டான்; பர்மிய தலைநகராகிய மண்டலேயைப் பிரித்தானியர் பிடித்தபோது அங்குள்ள 26 அடி உயரமான சிம்மாசனத்தையும்பிரித்தானியர் கவர்ந்துகொண்டு போய்விட்டனர்; ஆனால் அந்தச் சிம்மாசனம் இப்பொழுது இங்கிலாந்திலிருந்து லார்ட் மவுன்ற்பாற்றனாற்கொண்டுவரப்பட்டிருக்கிறது அதனை இந்திய பிரதிநிதிகாவலராகிய லார்ட் மவுன்ற்பாற்றன் இந்த மார்ச்சு 11-ந் தேதி பர்மிய பிரஜாதிபதியிடம் ஒப்புவிக்கவிருக்கிறாராம்

## 15 ஜெர்மனியர் தூக்கிட்டுக் கொல்லப்பட்டனர்

யுத்தகாலக் குற்றவாளிகளென்ற குற்றச் "சாட்டில்" பின்னரும் 15 ஜெர்மனியர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனராம்.

# வடஇலங்கைத் தீவகசமாஜம்

கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் தலைவர் திரு. வ. நவரத்தினம் அவர்கள் தலைமையிற் கூடிய வட இலங்கை தீவகசமாஜ விசேஷ மகாநாட்டில் மகாத்மாகாந்தியடிகளின் பிரிவைக் குறித்து அனுதாபம் தெரிவிக்குமாறு கீழ்க்காணும் தீர்மானம் வணக்கத்துடன் நிறைவேற்றப்பட்டது.

"வட-இலங்கைத் தீவகங்களின் மக்கள் குழுமிய இம்மகாநாடு உலகம் வழுத்தும் மகாத்மாகாந்தியடிகள் மன்பதை பதைக்க இவ்வுலக வாழ்வைநீத்த செய்திகேட்டுப் பெருந் துயரிலாழ்ந்து கிடக்கின்றது நாதாவிளக்கு அணைந்துவிட்டது ஆயினும் பிரபஞ்சமனைத்திலும் பரிணமித்துக்கொண்டிருக்கும் அதன் ஞானச்சாதி யுக யுகாந்தங்களுக்கும் வழிகாட்டியாயிருந்து மக்களை நல்வழிப்படுத்தி உய்வுறவைக்கும் என்ற நம்பிக்கையில் இம்மகாநாடு ஆறுதலடைகின்றது. மகாத்மாஜியின் ஆத்மாவுக்குக் கைகூப்பி அஞ்சலி செய்கிறது இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள் மூலமாய் இந்திய மக்களுக்கும் அவர்களின் அரசாங்கத்துக்கும் ஸ்ரீமான் தேவதாஸ் காந்தி மூலமாக அடிகளின் புனித குடும்பத்தினருக்கும் அவர்கள் துயரில் அவர்களோடும் சகல ஜீவராசிகளோடும் வட இலங்கைத் தீவக மக்களும் பங்குபற்றிக் கொள்ளுகின்றனரெனத் தெரிவித்து அம் மக்களின் பொது ஸ்தாபனமாகிய வட இலங்கைத் தீவகசமாஜம் கூட்டிய இம் மகாநாடு தீர்மானம் செய்கின்றது."

தலைவர் அத்தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் எப்போது இவ்வுலகத்தில் அதர்மம்தோன்றி உலகை ஆக்கிரமித்துக்கொள்ளுகின்றதோ அப்போது பரமன் அவதாரவுருவெடுத்து அதை அழித்து மக்களை உய்விக்க உலகில் தோன்றுவார் என்றும் அதர்மம் மலிந்து எங்கும் தலைவிரித்தாடும் இந்நாளில் பரமனே மகாத்மா காந்தியென அவதாரமெடுத்து அகிம்சையெனும் ஆயுதபூஷணமுடன் உலகத்தை ஆட்கொண்டுள்ளார் என்றும், அம்மகானை எம்மொழியிலும் நாம் வாயாரப் புகழ முடியாதெனவும், அவருடைய உபதேசங்களை அனுட்டிக்க முயலுவதே அவரைப் புகழ்வதாகவும் கூறினர்.

தீர்மானம் குறித்து ஸ்ரீமான் V. தில்லைநாதன் அட்வக்கேட் அவர்கள் பேசினார்கள். இக்கூட்டத்தில் காலஞ்சென்ற புங்குடுதீவு திரு க. அம்பலவாணர் அவர்களின் தேகவியோகம் குறித்து அநுதாபம் தெரிவிப்பதாக ஓர் தீர்மானம் நிறைவேறியது கடித

## மாவின் விலை

### இன்னும் அதிகரிக்கலாம்

பிரிட்டிஷ் உணவுப்பகுதி உதவிமந்திரியான திரு. எஸ் டபிள்யூ ஹாட் சென்றவாரம் இலங்கை உணவு மந்திரி திரு. எ. ரத்னாயக்காவுடன், சீனி, மா என்பவற்றின் நிலைமை சம்பந்தமாகச் சம்பாஷித்தார். இந்தச் சம்பாஷணைக்குப் பின்னர், திரு. ரத்னாயக்கா மாவின்விலை, அமெரிக்காவின் "மார்ஷல்" திட்டத்தினால் இன்னும் அதிகரிக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறார். உலகமெங்கும், மாவுக்கு அதிகம் தேவையிருப்பதே இதற்குக் காரணமாம்.

## நிசாமைக் கொல்லமுயற்சி

ஹைதராபாத் நிசாம் மன்னரைச் சென்ற டிசெம்பர்மாசம் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நசேன்ரூவ் என்னும் வாலிபர் சென்றவாரம் ஹைதராபாத் உயர்தர நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைச் சிறப்பு

முதலாம் பக்கத் தொடர்ச்சி

சியாளர் இவ் வாசிரியர்களுடைய காலத்தை வரையறை செய்துள்ளார்கள்.

செந்தமிழில் இருக்கும் நூல்கள் பலவும் வழிநூல்களாகவே இருத்தல் கண்கூடு; அப்படி முதல் நூல்களாகவே இருக்கின்றன என்றால் அவை புறச்சமய நூல்களேயாதல், இன்பக்கூறுமிக்குடைய நூல்களேயாதல் காண்டும். கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியன வடமொழி வாயிலாக வந்தனவாகும். 12-ம் திருமுறைக்கு ஒரு தனிப்பெருமையுண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய "தென்தமிழ்ப் பயனுயுள்ள" திருத்தொண்டத் தொகையே இந் நூலுக்குப் பதிகமாய் உள்ளது. இச் "சுந்தரதிருத்தொண்டத் தொகைத் தமிழ்" தோத்திரரூபமாய் இருத்தல் குறிப்பிடத்தகும். "அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பிகள் புந்தியாரப் புகன்ற" தோத்திர நூல் திருத்தொண்டர் திருவந்தாதி என்பது. "தில்லை வாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதமபோற்றி ஒல்லை அவர் புராணகதை உலகறியச்" செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிகள் விரித்துரைத்தனர். இம் மூன்றனுள் தொகைநூல் 7-ம் திருமுறையிலும், வகைநூல் 11-ம் திருமுறையிலும் வைக்கப்பட்டுள்ளன. மற்றைக் காவியங்களுக்கு முதல் நூல்கள் பெரும்பாலும் வேற்றுமொழிகளிலேயே இருக்கும். அன்றேல் (முன்னர்க் குறித்தவாறு) நாம் படித்தறிய முடியாத வடமொழியிலிருக்கும். இம்முறையின்றித் தொகை வகை விரி ஆகிய மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாகத் திருமுறையிலேயே இடம்பெற்று இருப்பது திருமுறைகளுக்கே தனிப் பெருமையென்க.

இத்திருமுறையின்கண் அகண்டாகார நித்த வியாபக அழற்சோதிப் பிழம்பாகிய சிவபிரானார் தாமே அடியெடுத்துக் கொடுத்த வாக்குப் பலவுள. "தோடு கூற்றுப் பித்தா மூன்றும்—பீடுடைத்தேசிகன் பேரருளாகும்" என்றமையின் "தோடு" என்ற முதல் திருமுறை முதற் சொல்லும், "கூற்று" என்ற 4-ம் திருமுறை முதற் சொல்லும் இறைவனால் கொடுக்கப்பட்ட வாக்கன்றேனும் இறைவனின் அருளாற் பிறந்த வாக்கென்பது பெறுதும். "முன்னெனைப் பித்தனென்று மொழிந்தனை ஆதலாலே—என்பெயர் பித்தனென்றே பாடுவாய்" என்ற இதனானே பித்தர் என்ற 7-ம் திருமுறை முதற்சொல் இறைவர் வாக்கு ஆயினமை காண்க.

11-ம் திருமுறையிற் காணும் திருத்தொண்டத்தொகையும் மற்றே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க வன்றொண்டனார் பாடினார் என்பதைப் பெரிய புராணத்துட் காண்க. திருவாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரம் 11-ம் திருமுறையில் முதலாவதாகவுள்ளது அப் பாசுரம் முழுமையும் இறைவனார் அருளிப் பாணபத்திரனார்க்குக் கொடுத்தனர் என்பதைக் கழறிற்றறிவார் நாயனார் புராணத்து 26, 28-ம் செய்யுட்களில் படித்தறிக.

12-ம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் "உலகெலாம்" என்று தொடங்கும் சீர்மை உலகெலாம் அறியும். சேக்கிழார் நாயனார் தில்லை அம்பலவாணர் முன் தாழ்ந்தெழுந்து "அடிகளே! உனதடியாரின் சீர் அடியேன் உரைத்திட அடியெடுத்து இடர்கெடத் தருவாய்" எனத் திருவருளை எண்ணி இறைஞ்ச, "உலகெலாம்" என்று ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. இதனையே முதலாகக் கொண்டு சேக்கிழார்சுவாமிகள் பாடி முடித்தனர். இவ் வதிசயச்செய்தியைச் சேக்கிழார்பிள்ளைத்தமிழின்கண் "பாகொண்ட தொண்டர் வரலாறு சொல் புராணம் அம்பலவர் அருளால் அமைந்தபடி தெரித்திட உலகெலாம் எனும் சுருதி நாப் பண்ணும் ஈற்றும் பொருந்திப் பேர்கொண்ட சைவபரிபாடையறிவரிய சம்பிரதாயம் முதலியாவும் பிறங்கத் தெரித்து எம்மையாண்ட குன்றத்தூர்ப் பிரான்" என்ற அடிகளில் விளக்கமாகக் காணலாம்.

— ஞானசம்பந்தம்

## உனுப்பிட்டி ஹிந்துக்கள்சபை

வத்தளை உனுப்பிட்டியைச் சேர்ந்த இந்துக்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை 22-2-48 மாலை 6 மணியளவில் உனுப்பிட்டியில்கூடி ஓர் சங்கம் தேவையென்பதை ஏகமனதாக ஆலோசித்துத் தீர்மானித்தார்கள். இக்கூட்டத்திற்குத் திரு. வி. தில்லைநாதன் அட்வக்கேட் அவர்கள் தலைமைவகித்தார் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயதும் தலைவர் தமது முன்னுரையிற் இவ்விதமான ஓர் சங்கத்தின் அத்தியாவசியத்தைப்பற்றியும் சமயத்திற்கும் தமிழிற்கு முள்ள இணைபிரியாத் தொடர்பைப்பற்றியும் பல சைவசமய அடியார்களின் அரும் பெருந் தொண்டையும் உதாரணமாகக் காட்டி தற்காலத் தமிழ்மக்களும் பொதுவாக இந்துக்களும் எவ்வாறு தத்தம் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதைக் குறிப்பிட்டார். அதன்பின் திரு. க. நடேசன் என்பவரால் கீழ்க்கண்ட தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

'வத்தளை - உனுப்பிட்டிலுள்ள இந்துக்களுக்கு இந்துசமயம், தமிழ் முதலியவற்றை முன்னேற்றும் நோக்கமாக இச் சபைகூடி, மேற்படி கொள்கை அடங்கிய தீர்மானத்தை ஆதரிக்கின்றது."

மேற்காட்டிய தீர்மானம் ஏகமனதாக சபையோரால் அங்கீகரிக்கப்பட்டதும் மேற்படிசங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மகாத்மாகாந்தி அடிகளின் அகால மரணத்தை முன்னிட்டு தலைவர் சொற்பொழிவு நிகழ்த்தியபின் சபையோர் எழுந்து நின்று இரண்டு நிமிஷம்வரையில் மௌன வணக்கம் செய்தனர். திருவண்ணாமலைப் பகவான் ஸ்ரீ ரமணமகரிஷிகளின் சரித்திரத்தைக்கூறும் தர்ம வெளியீடுகள் சபையோருக்கு வழங்கப்பட்டன. வந்தனோபசாரத்தின்பின்பு, தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

— கடிதம்.

## கொழும்புநகரில் முத்துச்சம்பா அரிசி

கொழும்பு நகரிலே கோட்டைப் பகுதியில் முத்துச்சம்பா அரிசி "சேர்" ஒன்று 1 ரூபா 40 சதவீதம் சோரவியாபார முறையில் விலைப்படுகிறதாம். இந்தச் சம்பாஅரிசி இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குவந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புப் பட்டினத்திற்குச்சோர முறையிற்சென்று விலைப்படுகின்றதென ஒரு அரிசிக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவிக்கின்றார்; அங்கே சோரவியாபார முறையில் விற்கப்படும் ஏனையஇன அரிசிகள் அரசினர் பண்டசாலையிலும் ஐக்கியசங்கக் கடைகளிலுமிருந்து பிழையான வழியிற் சோரவியாபாரிகளிடம் போய்ச்சேர்ந்துள்ளனவாம்; இந்தமார்ச் மாசத்திலேயே பர்மா தேசத்திலிருந்து மூப்பதினாயிரந் தொன் நிறைகொண்ட அரிசி இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுமாம்; இன்னும் 50 நாட்களுக்காகிய கோதுமை யாவும் விநியோகத்திற்குக் கைவசமிருக்கின்றதாம்.

## வழக்காளிகளுக்குச் செலவு கொடுக்கவேண்டும்

பாராளுமன்றத்திற் கண்டிப் பகுதிப் பிரதிநிதியாகவும் தொழிற்பகுதி மந்திரியாகவும் இருந்த மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ. டி சில்வா, தம்முடைய பதவியை இழக்க நேர்ந்ததோடமையாது, தமக்கு மாறாக வழக்குத் தொடர்ந்தவர்களாகிய மிஸ்ரர் T. B. இலங்கரத்தினத்திற்கு 7000 ரூபாவும், மிஸ்ரர் ஹோன் வீரசேகராவுக்கு 3000 ரூபாவும் வழக்குச் செலவாக இறுக்கும்படி தீர்ப்புப் பெற்றார்.

## பங்குனிமாச விசேஷ தினங்கள்

1-ந் உ (14-3-48) ஞாயிறு திருக்கோணமலை பத்திரகாளிகோயில் கொடியேற்றம்
2-ந் ,, (15-3-48) திங்கள் காரைநகர் சிவன்கோயில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில், மூளாய் முத்துக்குமாரசுவாமிகோயில், இடைக்காடு புவனேசுவரியம்மைகோயில், கண்டி செல்வ விநாயகர்கோயில், கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் கோயில் நெடுந்தீவு பிள்ளையார்கோயில், கரவெட்டி மயார்க்கரு விநாயகர்கோயில் பண்ணாகம் விசவத்தை முருகமூர்த்திகோயில் மகோற்சவஆரம்பம்.
3-ந் ,, (16-3-48) செவ்வாய் கார்த்திகை விரதம்.
4-ந் ,, (17-3-48) புதன் நேசநாயனார் குருபூசை
6-ந் ,, (19-3-48) வெள்ளி கணநாதநாயனார் குருபூசை,
8-ந் ,, (21-3-48) ஞாயிறு முனையடுவார் நாயனார் குருபூசை.
9-ந் ,, (22-3-48) திங்கள் பிரதோஷ விரதம்,
11-ந் ,, (24-3-48) புதன் பூரணைவிரதம் பங்குனி உத்தரம் வண்மேற்கு காட்டுத்துறை கருணாகர வைரவ பகவதி மாரியம்மைகோவில் கந்தபுராணப் படிப்புத் தொடக்கம்.
12-ந் ,, (25-3-48) வியாழன் காரைநகர் மணற்காடு மாரியம்மைகோவில் கொடியேற்றம்.
14-ந் ,, (27-3-48) சனி காரைக்காலம்மையார் குருபூசை
15-ந் ,, (28-3-48) ஞாயிறு மானிப்பாய் மருதடிப் பிள்ளையார்கோயில் கொடியேற்றம்.
24-ந் ,, (6-4-48) செவ்வாய் தண்டியடிகள்நாயனார் குருபூசை பிரதோஷவிரதம்.
27-ந் ,, (9-4-48) வெள்ளி அமாவாசை விரதம்.
30-ந் ,, (12-4-48) திங்கள் கார்த்திகை விரதம்.

இவ்வருடம் பங்குனிமாசத்தில் ஐந்து திங்கட்கிழமை நிகழும், இவ்வைந்து திங்களிலும் மட்டுவிற் பன்றித்தலைச்சியம்மைகோவிலில் விசேஷ பொங்கலும் திருவிழாவும் நடைபெறும்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சமிந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்கும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்.

td 14 20-11-46—20-11-48 (தி)


## புதிய இந்திய அரசியல்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்

புதிய திட்டப்படி இந்திய குடியரசிற்கு ஒரு ஜனாதிபதி ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவார் பார்லிமெண்ட் சபைகளிரண்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களும், மாகாண சட்டசபைகள் தேர்ந்தெடுக்கும் அங்கத்தவர்களும் ஜனாதிபதியையும், உதவி ஜனாதிபதியையும் தேர்ந்தெடுப்பார்கள்

பிரதமரையும் மற்ற மந்திரிகளையும் ஜனாதிபதி தமது ஆலோசனையின் பேரில் நியமனம் செய்வார். பொது ஜனசபை என்றும், அரசாங்க சபை என்றும் இரு சபைகள் அடங்கிய பார்லிமெண்டை நிறுவ புதுத்திட்டம் ஆலோசனை கூறுகிறது.

அரசாங்கசபையில் 250 அங்கத்தவர்கள் இருப்பார்கள், அவர்களில் 15 பேர்கள் ஜனாதிபதியினால்நியமனம் செய்யப்படுவார்கள் பாக்கியுள்ளவர்கள் மாகாணங்களிலிருந்து சேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பர்

வயதுவந்தவர் வாக்கெடுப்பு முறைப்படி பொதுஜன சபைக்கு அங்கத்தினர் தெரிவு செய்யப்படுவார்கள்.

பார்லிமெண்டு நடவடிக்கைப் போக்கு வரத்துவிவரம் முதலானவைகளிந்தி அல்லது ஆங்கிலத்தில் நடத்தப்படும்.

அரசியல், சமூக, பொருளாதார நேர்மையும், பேச்சுரிமையும் மதாச்சாரங்களை அவரவர் முறைப்படியனுஷ்டிக்கும் உரிமையும், ஒரே சீரான அந்தஸ்தும், சம சந்தர்ப்பமும் அனைவருக்கும் வழங்கப்படும்.

"தீண்டாமை" ஒழிக்கப்படும். கௌரவப் பட்டங்கள் போக்கப்படும், ஜாதி, மத, பால் வேற்றுமைகளுக்கு இடமில்லை.

தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் 14 வயதுக் குட்பட்ட குழந்தைகளிடம் வேலை வாங்குவதும் கட்டாயமாக ஜனங்களிடம் வேலை வாங்குவதும் தடை செய்யப்படும். ஆண் பெண் இருபாலார்க்கும் சரி சம்பளம் கொடுக்கப்படும். இலவச ஆரம்பக் கல்வி வசதியும், சமூக வசதித் திட்டமும் அனைவருக்கும் உண்டு.

14 வயதுவரை கட்டாயக் கல்வி போதிக்கும் திட்டம் 10 வருஷங்களுக்குள் அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மந்திரிசபையின் ஆலோசனையின் பேரில் இயங்கும் ஒன்பதுமாகாணங்களுக்கும் ஒன்பது தேசாதிபதிகள் இருப்பார்கள்.

சிலமாகாணங்களில் இரண்டுசட்டசபைகளும் பாக்கியுள்ளவற்றில் ஒரு சட்டசபைமட்டும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

கொழும்பு திரு. க. இராமச்சந்திரன் பின்வருமாறு எழுதுகிறார்:—

காந்தியடிகளின் ஞாபக சின்னங்கள் குறித்து நல்லாய் ஆராய்ந்த முடிவே வர வேண்டும். பலர் தங்கள் சொந்தக் கொள்கைகளை நிறைவேற்ற இதுவே நல்ல சந்தர்ப்பமெனக் கருதிப் பணம்சேகரிக்க முன்வந்துள்ளனர் பணத்தை இந்த யுகத்தில் கல்வில் மண்ணில் செலவிடுதல் தர்மமாகாது. அடிகளின் கொள்கைகளை அந்த அந்தநாட்டு மொழிகளில் பரப்புதலே வேண்டப்படுவது. அத்தொண்டு சித்தியடையவேண்டுமெனில், அவரின் லட்சியங்களோடு மெய்த் தொடர்ச்சியுடையவர்களே ஈடுபடவேண்டும்.

●

## நாவலர் வரலாறு

இந்நூல் புதுச்சேரியில் புதுயுகநிலைய அச்சகத்தில் சென்ற புதன்கிழமை மாலை நாலரை மணிக்குப் பொருந்திய சுப வேளையில் அச்சேறியுள்ளது இரண்டு மாசத்துள் நூல் வெளியாகும்

## அறிவித்தல்

இதுவரை வண்ணார்பண்ணையில் வசித்த யான், யாழ்ப்பாணம் ஸ்ரான்லிறேட் அந்தத்தில் றெயில்வே குட்ஸ்ஷெட்டுக்குப் பின்னால் 133 ம் இலக்கத்தில் உள்ள என்னுடைய சிரந்தரமான வாசஸ்தானத்துக்குப்போய் என் தொழிலை ஆற்றுகிறேன் என்பதை எனது வாடிக்கைக்காரர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

R. பாப்பையா,
கண்வைத்தியர்,
133, ஸ்ரான்லிறேட் (அந்தம்)
யாழ்ப்பாணம்.

Srd 42 (2-3-48—30-5-48)

## தமிழன்பர்களுக்கு வரவேற்பு

25-2-48 புதன்கிழமை மாலை 7 பணியளவில் பண்டிதமணி சு. நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்களுக்கும் வித்துவான் க. வேந்தனார் அவர்களுக்கும் அளவெட்டி தமிழ்க்கலை மன்றத்தினர் ஓர் வரவேற்பு அளித்தனர். திரு. எஸ் கிருஷ்ணசாமிஐயர் அவர்கள் B. A, தலைமை வகித்தார். மன்ற அமைச்சர் திரு. அ. பொ. அருணாசலம் அவர்கள் தலைவர் அவர்களையும் பேச்சாளர்களையும் தமிழ்ப் பேரன்பர்களாய பண்டிதமணியையும் வித்துவானையும் வரவேற்று நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

வலி-வடக்கு ஆசிரியர்சங்கத் தலைவர் திரு அ பொன்னுத்துரை அவர்களும் பண்டிதர் க நாகலிங்கம் அவர்களும் இருவருஞ் செய்த தொண்டினையும் அவர்கள கலைப்பண்பினையும் விரித்து நன்கு பாராட்டியும் வியந்தும் பேசினர்கள்.

பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் தமதுபதிலுரையில் மாணவர்கள் நூல்களைக் கற்றுத் தூன்றிப் படியாது ஆராய்ச்சியிறங்குவதைக் கண்டித்தார். அளவெட்டி தமிழ்க்கலை மன்றத்தினர் தம்மேற்கொண்ட அன்பு அளவிடற்கரியது எனப் போற்றிப் புகழ்ந்தார்.

## கீரிமலை
## ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில்

கீரிமலை க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காசிவிஸ்வநாத சுவாமிக்கு சிவராத்திரி தினமாகிய சர்வசித்து வருஷம் மாசி மாதம் 26 ம் திகதி (9-3-48 செவ்வாய்க்கிழமை இரவு 12 மணிக்கு அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், பஞ்சமுக ஆராதனையும், பஞ்சமுகார்ச்சனையும் ஸ்ரீ சோமாஸ்கந்தர் வீதியுலாவும் நடைபெறும். அன்று சிவபக்தர்கள் யாவரும் தங்களாலியன்ற அபிஷேகத்துக்குரியவைகளைக் கொணர்ந்து அபிஷேகாராதனைகளைக் கண்டு பிரசாதம்பெற்று இஷ்டசித்திகளைப் பெற்று உய்வார்களாகவென்று தொண்டன் சுவாமி ஷண்முகானந்தா அறிவிக்கிறார்.

## திருச்சி ரேடியோ

புதன் மார்ச் 3

காலை 7 15 கிராமம் இசைத்தட்டு 7 20 தமிழில்செய்திகள் 7 30 பி லம்போதர பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ரேடியோ வாத்ய கோஷ்டி 8 30 சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 லம்போதர பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 பி லம்போதர பாகவதர் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 கும்பகோணம் சிவவடிவேலு பிள்ளை வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாளர் திருவாளத்தான்தொடர்நாடகம் 7 15 சித்ரகானம் இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 பேச்சு 8 சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் பாட்டு 8 30 கும்பகோணம் சிவவடிவேலுபிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாகஸ்வரம் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 கோட்டு வாத்தியம் புல்லாங்குழல் 10 இசைவேளை இசைத்தட்டு 10 0 முடிவு

வியாழன் மார்ச் 4

காலை 7 15 கிராமம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருக்கோகர்ணம் ஆர் சுப்பிரமணியஐயர் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 கமலா கிருஷ்ணமூர்த்தி இசைத்தட்டு 8 30 பாலக்காடு எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 உந்தீ பற பெண்களுக்கான இசைநிகழ்ச்சி 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருக்கோகர்ணம் ஆர் சுப்பிரமணியஐயர் வீணை 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 கைத்தொழிலும் வேலையும் 7 30 தமிழில் செய்திகள் 7 45 வி பி லக்ஷ்மிநாராயணமேனன் பாட்டு 8 5 எம் டி பார்த்தசாரதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நால்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வி பி லட்சுமிநாராயண மேனன் பாட்டு 10 30 முடிவு.

வெள்ளி மார்ச் 5

காலை 7 15 கிராமம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வி ராமசாமி ஐயர்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 மாஞமதுரை எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 வி ராமசாமி ஐயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 மாஞமதுரை எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 திருவெண்காடு பி எஸ செல்வரத்தினம் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி பி எஸ் செல்வரத்தினம் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 திருவெண்காடு பி சுப்பிரமணி பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 உதயசன்னி இசை நிகழ்ச்சி 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

## கலாரங்கம்

நிகழும் சர்வசித்து வருஷம் மாசி மீ 25 ந (8-3-48) திங்கட்கிழமை மாலை 5 மணிதொடக்கம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் திரு S. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் ஓர் கதாப்பிரசங்கம் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1 பஜனை: T. விநாயகம் அவர்கள்
2 தலைவர் உரை
3 கதாப்பிரசங்கம் 'மாணிக்கவாசகர்"
திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை
4 நன்றியுரை செல்வி R. R. செல்லையா
தலைவர் கலாரங்கம்

என்று கலாரங்கக் காரியதரிசி ... தம்பித்துரை தெரிவிக்கிறார்.

# கந்தபுராணக் கவிநுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

தொன்னிலை தவாது வைகுஞ் சூரனே முதலா வுள்ள
ஒன்னல ருயிரை மாற்றி யுமபரும் யானும் பாங்கர்
மன்னிநின் றேவல் செய்ய வானுயர் துறக்க நண்ணி
யென்னர சியற்றி யேந்தாய்! இருத்தி யென்குறையீ தென்றான்.

எம் பரமபிதாவே! பழைய நிலைமையிற் சிறிதேனுங் குறைவுபடாது வாழுகின்ற சூரபன்மன் முதலகவுள்ள பகைவருடைய உயிரை நீக்கி, தேவர்களும் தமயேனும் தேரீருடைய தருமருங்கில் நின்று குற்றேவல் புரிய, மேமேலுயர்ந்துள்ளதாகிய சுவர்க்கஉலகத்திற்கு எழுந்தருளித் தமியேனுடைய இராச்சியத்தை ஏற்று ஆண்டுகொண்டு எழுந்தருளியிருத்தல் வேண்டும்; இதுவே தமியேன் செய்யும் விண்ணப்பம் என (இந்திரன்) இரந்தான் என்பது கருத்து

பரமேசுவரனிடத்தில் தான் பெற்ற வரங்களாகிய நீடித்த செல்வம் அதிகாரம் வைச்சிரயாக்கை யென்னு மிவைகளிற் சிறிதேனுங் குறைதலின்றிப் பரிபாலனஞ் செய்யுஞ் சூரனென்பான் 'தொன்னிலை தவாது வைகுஞ் சூரன்" என்றானென்க. சூரபன்மன் முதலாம் அசுரரை வதைத்து, தானும் ஏனைய தேவர்களுந் தொண்டுபுரியத் தனது இராச்சியத்தை ஆண்டருள வேண்டுமென இந்திரன் அறுமுகத்திறைவனுக்கு விண்ணப்பஞ் செய்ததமை அவனிடத்தில் உண்மைஞான மில்லாமையினாலென்க. (104)

இகமொடு பரமும் வீடும் ஏத்தினர்க் குலப்புறமல்
அகனம ரருளால் நல்கும் அறுமுகத் தவற்குத் தன்சீர்
மகபதி யளிப்பான் சொற்ற வாசகஞ் சுடரோன் றங்கிப்
பகவனுக் கொருவ னல்கப் பரவிய போலும் மாதோ.

தம்மை வந்திப்பவர்களுக்குத் தமது திருவுள்ளத்திற் கொண்டுள்ள பேரருள் காரணமாக, இம்மையின்பங்களையும் மறுமையின்பங்களையும் இடையீடின்றி வழங்குகின்றவராகிய சண்முகப்பெருமானுக்கு இந்திரனானவன் தன் பதவியைத் தருவதாகச் சொன்ன விண்ணப்பம் (எதுபோலுமெனில்) ஒருவன் அக்கினிதேவனுக்கு ஒரு சுடரைத் தருகிறேனென இரந்தவாறாகும் என்பது கருத்து.

உபமான உபமேயங்கள் வெளிப்படை. தம்முடைய பரத்துவத்தை ஞானத்தினால் உள்ளவாறு உணர்ந்து தம்மை வழிபட்டுத் துதிப்போர்க்கு அறுமுககடவுள் திருவுளமிரங்கி யருள்புரிந்து அன்னோரை யீடேற்றுவாரேயன்றி, அகங்கார மமகாரங்களாற கட்டுண்டு ஞானமென்பது எட்டுணையுமின்றிக் கிடந்துழலும் உயிர்கட்கு எம்பெருமானுருடைய திருவருள் இல்லை யென்பதைக் குறிப்பாலுணர்த்துவார். 'ஏத்தினர்க்கு உலப்புறமல் அகனமரருளால் நல்கும் அறுமுகத்தவ"னென்றார்; இந்த இந்திரன் சூரபன்மனால் பலவாற நீடித்தகாலந் துன்புறுத்தப்பட்டானெனினும், இன்னமும் அவனைப் பிடித்த பாசத்தடிப்புத் தேய்ந்திலனாதலின் "என்னரசு" என்று மேலுள்ள திருவிருத்தத்திற் கூறினான்; மேலும் இப்படலத்தில் முன்னரே இந்திரனை "ஆங்காரமிக்க மகவான்" என ஆசாரியசுவாமிகள் கூறியிருத்தலும், இக்காரணபற்றி யென்க. (105)

வானவர் கோனை நோக்கி வறிதுற நகைத்துச் சேவ்வேள்
நீநமக் களித்த தொல்சீர் நினக்குநாம் அளித்தும் நீவிர்
சேனைகளாக நாமே சேனையந் தலைவ னாகித்
தானவர் கிளையை யெல்லம் வீட்டுதுந் தளரே லென்றான்.

குமாரக்கடவுள் இந்திரனைப் பார்த்துக் குறுநகைசெய்து நீ எமக்குத் தந்த பழைய செல்வங்களை உனக்கு யாம் மீளத் தருகின்றேம: தேவர்களாகிய நீங்கள் எமக்குச் சைனியங்களாயொழுக, நாம் சேனாபதியாகி அசுரர்கூட்டத்தினை அழிப்பேம், (ஆகலினால்) மனம்வருந்தற்க எனக் கூறியருளினார் என்பது கருத்து.

வறிதுற நகைத்து - சிறுநகை செய்து; வறிது சிறிதாகும் என்பது தொல்காப்பியம் இனி வறிதுற நகைத்து என்பதற்கு இந்திரன் சிறுமையுறும்படி நிந்தஹா ஸஞ் செய்தனி ருமாம். செவ்வேள் கருணையங்கடலாதலின் "நீ நமக்களித்த தொல்சீர் நினக்குநாம் அளித்தும்" என அருளினனென்க. இக்காரணத்தினாலே முருகக்கடவுளுக்குத் தேவசேனாபதி யென்னுந் திருநாமம் வழங்கலாயிற்று; தானவர்கள் கிளையை வீட்டுதற்குத்தேவர்களைச் சேனைகளாகக் கொள்ளுதலின்றிப் பூதங்களையன்றோ படையாகக் கொண்டு முருகக்கடவுள் தானவரை வீட்டினாரெனச் சொல்லப்பட்டிருக்கிறதே யெனின, இந்திரன் கொண்டுள்ள தளர்ச்சியை நீக்குதற்கே முருகவேள் அங்ஙனங் கூறியருளினாரென்பது "தளரேல்" என்ற திருவாக்கினாற் பெறப்படும். (106)

## பட்டகாலே படும்

## மந்திரிமீது மற்றோர்வழக்கு

இலங்கைப் பாராளுமன்றத்துக்கான பிரமாணத்தை மீறி, முந்திகைத்தொழில் மந்திரியாயிருந்து தம் பதவியை இழந்த திரு. ஜோர்ஜ் ஈ டி. சில்வா, 18 நாட்கள் பாராளுமன்றத்திற் சமுகமளித்து அதன் கருமங்களிற் பங்குபற்றினாரதலின், தினம் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் 9000 ரூபா அபராதம் இறுக்க வேண்டுமென்று கண்டிப்பதற்கில் வசிக்கும் திரு. ஆர். ஏ. பெரீரா என்பவர் கொழும்பு டிஸ்திறிக் கோர்ட்டில் ஓர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

## சீனி அரிசி
## மோட்டார் ரதம்
## இலங்கையில் இறக்குமதி

சில தினங்கட்குமுன்னர் கொழும்புத் துறைமுகத்தில இருபதினாயிரம் சீனி மூடை, 10340 அரிசிமூடை, 91 பிரதானிய மோட்டார் ரதங்கள், புடைவை துணிகள், கோப்பைகள் மின்சாரப்பொருள்கள், துவிச்சக்கரங்கள், உவிஸ்க்கி, பீர், மதுபானங்கள் முதலியன கொழும்பில் இறக்குமதியாயினவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயகுரவர் சந்தானகுரவர்

[சரித்திரச் சுருக்கம்]

*

இந்துசாதனப் பத்திராசிரியர்

## ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

தொகுத்தது

இந்நூல் தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸி. (S. S. C.) மாணவர்கட்குச் சைவ சமயப் பாடங்களுளொன்றாகவிதிக்கப்பெற்றுளது.

விலை 75 சதம் (12 அணா)

மனேஜர்,
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை.

வண்ணார்பண்ணை,
20—2—48.

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

## க. ஆறுமுகம்பிள்ளை

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

# கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுகிறுப்பு பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

## கால் றாத்தல் விலை ரூபா 5-00

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்

— வல்வெட்டித்துறை —

Std :5 1-7-47—30-6-48 (செ)

## திருக்குறள்: அறத்துப்பால்

(1 38 அதிகாரங்கள்)

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவைகளுடன், இந்துசாதனப் பத்திராசிரியர் ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை வகுத்தது; யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 30வது பிரசுரம்,

விலை ரூபா 1 — 25

வண்ணார்பண்ணை
27-2-48

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு
இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std. 7-8 29 1-8—30-4

# நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினாங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம் கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

## எஸ். ஆர். எஸ். நாதன்

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6-47—6-6-48

# வெளிவந்துவிட்டன!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்களியற்றிய புதியபாடத் திட்ட

## நாலாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—35

## ஐந்தாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—75

சிறந்த விளக்கமுறைகள்! நிரம்பிய மனக்கணிதப் பயிற்சிகள்!
தெளிவான அப்பியாசங்கள் கொண்டுள்ளன
இரண்டாம், மூன்றும், ஆருந்தரக் கணிதங்களும்
மனக்கணிதங்களும் (அச்சில்)

PUBLISHERS:

THE NORTH CEYLON BOOK DEPOT

POINT PEDRO

St 640 27 2-48 — 26-3 48


## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, onTeusday March 2, 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org